
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 11 தொகுதி 2 ஏப்ரல் - ஜுன் 2021

**R 5453**

## "மற்ற ஒன்பதுபேர் எங்கே"

## "WHERE ARE THE NINE?"

**ஆதார வசனங்கள் : லூக்கா 17:11–19.**

**திறவுகோல் வசனம் : லூக்கா 17 :18 "தேவனை மகிமைப்படுத்துவதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக் காணோமே..."**

நன்றியுணர்வே இந்தப் பாடத்தின் சாராம்சமாகும். இது குணாதிசயத்தின் பொருத்தமான பண்புக்கூறாயிருந்து, இப்பண்பை மிருகங்களிடையேயும் அடிக்கடி பார்க்கமுடிகிறது. இந்த இயல்பின்றி, ஒரு பரிபூரண ஜீவியோ அல்லது ஒரு தேவதூதரோ தேவனால் அங்கீகரிக்கப்படுவதை கற்பனை செய்வது கூடாததாயுள்ளது. நம் நன்றியுணர்வை அளவீடாகக் கொண்டே தேவனால் நாம் ஏற்கப்படுவதன் படிநிலை பெரும்பாலும் உள்ளதை நம்மால் கூறமுடியும். தெய்வீகப் பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகளின் பொருளை நாம் புரிந்திருந்தாலும், அல்லது புரியாதிருந்தாலும், அவற்றுக்குக் கீழ்ப்படியும்படி இப்பண்பு நமக்கு வழிகாட்டுகிறது. தேவனுடைய ஊழியத்தில் சுயத்தை பலிசெலுத்தும் பெருமுயற்சிகள் எடுக்கும்படி வழிநடத்தி, தானே இயங்குகின்ற தெய்வீக ஏற்பாட்டின்படி அதன் ஆசீர்வாதங்களைக் கொடுக்கின்றது.

இரட்சகர், சமாரியா மற்றும் கலிலேயா வழியாக எருசலேமை நெருங்கினதை நம் பாடம் நமக்குக் கூறுகிறது. எருசலேம் செல்லும் அவரது இறுதிப் பிரயாணமாக இது இருந்ததை யூகிக்கமுடிகிறது, இது அவரது மரணத்துக்குக் காரணமாக்கியது. அவருடைய புகழ் சுற்றிலுமுள்ள தேசங்களில் பரவியிருந்தது, சாலையோரம் உட்கார்ந்திருந்த பத்து குஷ்டரோகிகள், நாசரேத்தூரராகிய இயேசு அவ்வழியே கடந்துபோகிறதைக் கேள்விப்பட்டனர். உடனடியாக தங்கள் நோயின் தன்மையால் பாதிக்கப்பட்ட கரகரப்பான குரலில், முடிந்தஅளவு அவரை உரக்க சத்தமிட்டு கூப்பிட்டனர். பணம் கேட்பதே அவர்களது வழக்கமான வேண்டுகோளாயிருக்கும். ஆனால் இச்சம்பவத்திலோ, "இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்" என்பதாக இருந்தது.

குஷ்டரோகிகள் வகுப்பார் பெரிதும் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்களுடைய நோய் நீண்டகாலமாக குணப்படுத்த முடியாததாக கருதப்பட்டிருந்தது. இதன் காரணமாக வேதாகமத்தில் இது, பாவத்துக்கு அடையாளமாக பயன்படுத்தப்பட்டது. இரத்தத்தை மாசுபடுத்தும் நோயாக இது காணப்பட்டது. மூட்டுகள் பிசகியும், அழுகியும், தோல் உதிர்ந்தும் பாதிப்பேற்படுத்தும். நம் பாடம் சம்பவித்த நாட்களில் நிலவின கட்டுப்பாடுகளின்படி, குஷ்டரோகிகள் பட்டணங்களுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு நுழைவோர்க்கு இரும்பு கம்பியால் 39 அடிகள் தண்டனை அளிக்கப்படும். ஜீவிப்பதற்காக வருமானம் ஈட்ட எவ்வழிவகையும் அவர்களுக்கு இல்லை, தங்களுடைய நண்பர்கள் அல்லது பொதுஜனங்களின் தர்மத்தையே எப்பொழுதும் சார்ந்திருந்தனர். தொற்று ஏற்படும் என்ற பயத்தால், மற்றவர்களை அணுகுவதற்கு 150 அடி

### இம்மாத வெளியீட்டில்


.. மற்ற ஒன்பதுபேர் எங்கே ? ..... 1

.. குணவளர்ச்சிக்கு சோதனைகள் அவசியம் .... 5

.. தேவனுடைய இஸ்ரயேல் ...... 10

.. இயேசுவுக்காய் வாழ்தல் ........ 16



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

இடைவெளியை பின்பற்ற வேண்டியிருந்தது. மரித்த ஜீவியமாக அவர்களது நிலை இருந்தது.

இப்பாடத்தில் குறிப்பிடப்பட்ட 10 என்ற எண், யூதருக்கும் சமாரியருக்குமிடையிலான இன ரீதியிலான தடைகளால் ஏற்பட்டிருந்த பொதுவான துன்பங்களை புறக்கணித்து, அனைவரையும் ஒன்றிணைத்திருக்கிறதை காண்பிக்கிறது. உதவிகேட்டு அவர்கள் கதறினதற்கு பதிலளிக்கும் விதமாக, இயேசு, பரிவிரக்கம் நிறைந்தவராயிருந்தாலும், அவர்களுடைய வேண்டுகோளை அச்சமின்றி கையாண்டதுபோல் தோற்றமளித்தது. அவர் அவர்களிடம் ; நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்'' என்று மட்டுமே கூறினார். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழிருந்த யூதர்களுக்கு தேவனுடைய ஏற்பாட்டின்படி, பாவங்களை அடையாளப்படுத்துகிற இந்த நோயைத் தவிர்த்து, வேறு நோய்கள் அவர்கள் அடைந்திருக்கவில்லை, ஆசாரியர்கள் குஷ்டரோக வழக்குகளில் நியாயத்தீர்ப்பை வழங்கவும், இந்த நோய் மெய்யாகவே குஷ்டரோகம் தானா இல்லையா என்று தீர்மானிக்கவும் வேண்டும். குஷ்டரோகிகள் ஆசாரியர்களிடம் சென்று தங்களைக் காண்பிக்கவேண்டும் என்று நம் கர்த்தர் வழிகாட்டினது, குணமாக்கப்படுதலை குறிப்பால் உணர்த்தி, அவர்கள் ஆசாரியன் இருக்கும் இடத்திற்கு சென்றடையும் முன்பே குணமாகியிருப்பார்கள், இவ்வாறு தாங்கள் சுத்தமாகியிருப்பதாக தீர்ப்பு வழங்கும்படிஆசாரியனிடத்தில் காண்பிக்க அவர் பரிந்துரைத்தார்.

இயேசுவின் வல்லமையைக் குறித்து போதுமானஅளவு அறிவை குஷ்டரோகிகள் அடைந்திருந்து, மேலான விசுவாசத்தை கையாண்டிருந்திருப்பார்கள். உடனடியாக குணமாக்கும்படி அவர்கள் கதறாமல், அவர் வழிகாட்டினபடி பின்பற்றினார்கள். ஆய்வு செய்யும்படியாக ஆசாரியரிடத்தில் காண்பிக்க புறப்பட்டார்கள். ஆசாரியரிடத்திற்கு சென்று சேருமுன்பே தாங்கள் குணமாகிவிடுவோம் என்றும், ஆரோக்கியமாக இருப்பதற்கான அறிவிப்பைப் பெறுவோம் என்றும் அவர்கள் நம்பினார்கள் என்பதில் ஐயமில்லை. அவரை சந்திக்க நடந்துசெல்கையில், சிறிது தொலைவு இருக்குமுன்பே, தாங்கள் குணமடைந்ததை கண்டுகொண்டனர். அவர்கள் மகிழ்ச்சியடைந்திருந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லவும், தங்கள் அன்றாட வாழ்க்கையை துவங்கவும் அவசியமான ஆசாரியரின் அங்கீகாரம் பெற எந்தளவு துரிதமாக சென்றிருப்பர் என்பதை நம்மால் நன்கு கற்பனை செய்ய முடிகிறது. அவர்கள் தூய்மையான இரத்தத்தை அடைந்திருக்கிற மகிழ்ச்சியால் ஓடினார்கள் என்று நிச்சயமாகக் கூறலாம். ஆனால் அவர்களில் ஒருவன் தன் வேகத்தைக் குறைத்து, பின்பு பின்னிட்டுத் திரும்பினான். இதை மற்றவர்கள் தங்கள் களிப்பு மிகுதியால் கவனிக்காது இருந்திருக்கக்கூடும். அவன் திரும்பிவந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, அவருக்கு நன்றிசெலுத்தினான். நன்றியுள்ள இருதயத்தை அவன் உடையவனாயிருந்ததால், அவன் இறுதியில் ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பான் என்பதில் நாம் ஐயம் கொள்ளக்கூடாது. இஸ்ரலேருடைய காணியாட்சிக்கு சமாரியர்கள் அந்நியராய், வேறு நாட்டவராக இருந்தார்கள். அவ்வேளையில், அதை அவன் அடையாமற்போனாலும், பின்னாளில் அடைந்திருப்பான்.

**மற்றுமொரு தயவாகிய துணிக்கை**

இச்சம்பவத்தில், ''பிள்ளைகளின் மேஜையிலிருந்து விழுந்த துணிக்கை'' குணப்படுத்தலைத் தந்தது. ஏனெனில் ஐஸ்வரியவான் இன்னும் மரித்திருக்கவில்லை. அதாவது, தேவதயவு, இஸ்ரயேலிடமிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. ''உங்கள் வீடு உங்களுக்கு பாழக்கிவிடப்படும்'' என்ற எதிர்கால விளைவை ஏற்படுத்தும் வார்த்தைகளை இன்னும் பேசியிருக்கவில்லை. அவர்களுடைய வீடு பாழக்கப்பட்டபிறகும், 3 1/2 வருடங்கள் இஸ்ரயேலருக்கான தனிப்பட்ட தயவு நீடித்தது. யூதர்களுக்கான தனிப்பட்ட தயவு நிறுத்தப்படுவதற்கு முன்பாக, 3 1/2 வருடங்களுக்கு முன் இயேசுவின் மரணம் நேரிட்டது. அவர்களுக்கான பிரத்யேக தயவு நிறுத்தப்பட்டவுடன், புறஜாதியாருக்கு சுவிசேஷம் செல்ல அனுமதிக்கப்பட்டது. கொர்னேலியு, தேவனுடைய ஐக்கியத்திற்குள் முதலாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டார் – அப்போஸ்தலர் 10ம் அதிகாரம்.

சமாரியனுக்கு பதிலாக ஒரு யூதன் திரும்பி வந்திருப்பானாகில், ''உன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா'' என அவருடைய பின்னடியார்களில் ஒருவனாக இயேசுவால் அழைக்கப்பட்டிருப்பான் என்பதில் ஐயமில்லை. அவன் ஒரு சமாரியனாக இருந்ததால், ''அவனை நோக்கி: நீ எழுந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'' என்று மட்டுமே இயேசுவால் அவனிடம் கூறமுடிந்தது. ஆயினும் அந்த நன்றியுள்ள சமாரியனோடு கர்த்தருடைய பராமரிப்பு பின்தொடர்ந்திருந்து, புறஜாதியாருக்கு கதவு திறக்கப்படும்

காலம் வந்தபோது, சுவிசேஷத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோரில் ஒருவனாக அவனும் இருந்திருந்து, தன்னை பிரதிஷ்டை செய்து, தேவனுடைய வாரிசாகவும், நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உடன் வாரிசாகவும் ஆகி, பரலோகத்துக்குரிய சுதந்தர பாகத்தைப் பெற்றிருப்பான் என்பதில் ஐயமில்லை.

“நீ எழுந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது” என்று நம் கர்த்தர் கூறின வார்த்தையின் மூலம், அந்த மனிதன் தெய்வீக வல்லமையிலிருந்து விலகியிருந்தாலும் அவனுக்கு இரட்சிப்பு கிடைக்கும் என்று நாம் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. அதற்கு மாறாக தெய்வீக வல்லமையை நம் குரு உபயோகித்து, தனிப்பட்ட நபரின் விசுவாசத்தோடு தொடர்புபடுத்துகிறார். அவன் குணமடைய தேவனுடைய வல்லமையும் அந்த மனிதனின் விசுவாசமும் கூட்டிசைவாக செயல்பட்டது. குணமடைந்த மற்ற ஒன்பதுபேரும் அதுபோலவே செய்தனர். அவர்களும் விசுவாசமுடையோராயிருந்து, குணப்படுத்தப்பட்டனர். நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் உள்ள யூதர்கள், மன்னிப்பு கேட்கவும் குணமடையவும் சமாரியனைக் காட்டிலும் அதிக உறுதி பெற்றிருந்தனர்.

**பத்துப்பேர் குணமாக்கப்பட்டனர் – மற்ற ஒன்பது பேர் எங்கே ?**

பத்துப்பேர் குணமாக்கப்பட்டனர், ஆனால் ஒரே ஒருவன் மட்டும் தேவனுக்கு மகிமையை செலுத்தும்படிக்கு திரும்பி வந்திருந்தான் என்று நிகழ்ந்த செயலை பொது ஜனங்களின் கவனத்துக்காக முன்வைத்தார். உண்மையாகவே, தம் மூலமாக நிறைவேற்றப்பட்ட தெய்வீக வல்லமையை உண்மையென்று ஒப்புக்கொள்ளவும், ஸ்தோத்திரம் செலுத்தும்படியாகவும், திரும்பி வரச்சொல்லி அவர்களிடம் அவர் கூறியிருக்கவில்லை ! மெய்யாகவே, அவர் அவர்களிடம் என்ன செய்யவேண்டுமென்று கூறினாரோ, அதை அவர்கள் செய்தனர் – ஆசாரியரிடத்தில் சென்று தங்களைக் காண்பித்தனர். அதற்கு மேலாக எதுவும் செய்யாமல், தங்கள் தொழிலை கவனிக்கும்படி சென்றுவிட்டனர்.

அவர்களுக்கு குணமாக்குதலை அருள்வதற்கு முன்பாகவே ; “நான் உங்களை குணப்படுத்தினால், என் சீஷராகும்படி உங்கள் ஜீவியங்களை அர்ப்பணிப்பீர்களா ? என்று ஏன் அவர்களிடம் பேரம் பேசியிருக்கக்கூடாது ? அவ்வாறு கேட்டிருப்பாரானால், அந்த ஏற்பாட்டுக்கு அவர்கள் உடன்பட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அருவருக்கத்தக்கதும் குணப்படுத்த முடியாததுமான வியாதியிலிருந்து விடுபடுவதற்காக, எந்த நிபந்தனைகளுக்கும் உடன்படுவதற்கு யார் மறுப்பு தெரிவிப்பர் ? இவ்வழிமுறையை கைக்கொண்டு, இயேசு ஏன் தம் சீஷர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவில்லை ? பிதாவின் நடவடிக்கைகளில் அவரது ஆவியைப் பின்பற்றினார் என்பதே இதற்கான ஐயத்திற்கிடமில்லாத பதிலாக இருக்கிறது. அதை அவர் தம் வார்த்தைகளில் வெளிப்படுத்தினார்.“ தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளும்படி பிதா பிரியமாயிருக்கிறார்”. பிதா மற்ற எவரையும் தேடாததுபோல, குமாரனும் அவ்வாறே மற்றவர்களைத் தேடுவதில்லை.

இவ்விஷயத்தில், சுவிசேஷகர்கள் மற்றும் மறுமலர்ச்சியாளர்கள் போன்றோரின் பிரசங்கங்கள், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய பிரசங்கங்களிலிருந்து, அநேகக் காரியங்களில் பலமாக முரண்படுகின்றன. இயேசுவோ அல்லது அப்போஸ்தலரோ உலகின் ஜனங்களை கிறிஸ்துவின் சீஷராகும்படி ஒருபோதும் வலியுறுத்தினதில்லை. அவர்கள் குறிப்பிட்ட மாபெரும் உண்மைகளை மட்டும் பிரசங்கித்து அல்லது பிரகடனப்படுத்தியிருந்து, அந்த மாபெரும் உண்மைகளால் ஈர்க்கப்பட்டவர்கள், அவ்வகையான பிரசங்கத்தின் கீழாக வருகிறார்கள். அவர்கள் பாவத்துக்கும், நீதிக்கும், வரவிருக்கும் நியாயத்தீர்ப்புக்கும் அல்லது வரவிருக்கும் தீர்மானமெடுக்கும் காலத்துக்குமான காரணத்தை பிரசங்கித்திருந்து, மற்ற காரியங்களை தனிப்பட்ட நபருடைய மனசாட்சிக்கு விட்டுவிட்டார்கள். பாவத்தை விட்டுவிட்டு, தேவனிடத்தில் திரும்பினவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தின் புண்ணியத்தின் மூலமாக, பாவமன்னிப்பையும் சீர்பொருந்துதலையும் அடைவார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டனர். இவ்வாறு பாவமன்னிப்புக் கோருபவர்கள் அனைவரும் தங்கள் ஜீவியங்களை தேவ ஊழியத்துக்கும், நீதிக்கும் முழுமையாக அர்ப்பணித்து, நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவிக்க மனதாயிருக்கும்போது, அவர்கள் மேலான அல்லது பரலோகத்துக்குரிய அழைப்பைப் பெறுவார்கள் என்று அவர்கள்கூறினர்.

குழப்பமுண்டாக்கும் தீவிர ஆர்வமுள்ள ஆவியை இயேசு ஒரு தருணத்தில் வெளிப்படையாகக் கடிந்துகொண்டு, அமைதியாய் நியாயந்தீர்த்தார்; “உட்கார்ந்து செல்லுஞ்செலவை கணக்குப் பார்க்கவேண்டும்” **(லூக்14:30).** சத்தியத்தை பிரசங்கிப்பதன் மூலம் ஒரு

வகுப்பாரை அழைத்து, அவர்கள் அவரது குமாரனுக்கு உடன்சுதந்திரராக வேண்டுமென்ற விருப்பம் தேவனுக்குப் பிரியமாயிருந்தது. ஜெபங்களின் மூலமாகவோ மனக்கிளர்ச்சியின் மூலமாகவோ அவர்கள் தேவ குடும்பத்திற்குள் கொண்டுவரப்பட மாட்டார்கள். மாறாக, தெய்வீக வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அறிவிப்பின்படியே சேர்க்கப்படுவார்கள். தேவகிருபையை ஏற்றுக்கொண்டவர்களுக்கு, அவர்கள் அதை விருதாவாய் பெறவில்லை என்ற அவசரசெய்தி கொடுக்கப்படுகிறது. அதன்படி, கலப்பையின் மேல் கை வைத்தபின், அவர்கள் திரும்பிப் பார்க்கக்கூடாது. சிலுவையின் நல்ல போர்வீரர்களாக தங்களை இணைத்துக்கொண்டு, தீங்கனுபவிக்கவேண்டும், ஊழியம் மற்றும் பலியின் சிலாக்கியங்களில் சந்தோஷமடைய வேண்டும்.

வேதாகமம் கூறுகின்ற நோக்கத்தின்படி பார்க்கும்போது, கர்த்தருடைய சேனைக்கு பணியாளர்களை சேர்க்க, உற்சாகப்படுத்தி தூண்டி அழைக்கும் வழிமுறையை பின்பற்ற, இயேசுவும் அவரது சீஷர்களும் எந்த முயற்சியும் ஒருபோதும் செய்யவில்லை. இதில் மற்றவர்களை நாம் குறைகூறாமல், அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் தேடுகின்ற தேவனுடைய பிள்ளைகளுக்கு வழிகாட்டுகிறதில் அதிகம் உதவக்கூடிய உண்மைகளுக்கு கவனம் செலுத்த அறிவுறுத்துகிறோம்.

**மற்ற பத்து, நூறு, ஆயிரங்கள்**

நம் பாடத்தின் சம்பவத்தை நாம் உருவக வடிவில் கண்ணோக்குவோமாக! குஷ்டரோகிகள் பாவிகளைக் குறிக்கிறதாயிருந்து, அவர்கள் தாங்கள் அசுத்தமாயுள்ளதை உணர்ந்துகொண்டு, தங்களை சுத்திகரிக்கும்படி கர்த்தரிடத்தில் கதறி அழுவதன்மூலம், தேவ குமாரனாகிய அவரது வல்லமையையும், மேன்மையையும் மறைமுகமாக ஏற்று, அறிக்கையிடுகிறார்கள். அவர் மூலமாக மட்டுமே பாவமன்னிப்பு கிடைக்கும் என்பதையும், அவருடைய பின்னடியார்களாகவும் சீஷர்களாகவும் ஆவதற்கு விருப்பம் கொண்டுள்ளதை மறைமுகமாக தெரிவிக்கிறார்கள். பாவம் காயப்படுத்தும் என்றும், இதற்குப் பிற்பாடு கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடக்கவேண்டி, தங்களுக்குள்ளும், எப்புறமுமுள்ள பாவத்துக்கு எதிராகப் போராடவும் தீர்மானிக்கின்றனர். பத்தும், நூறும், ஆயிரக்கணக்கான எத்தனைபேருடைய தேவபக்தியும், கர்த்தரிடத்திலான விசுவாசமும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எத்தனைபேருடைய வெளிப்படையான சீஷத்துவத்தை ஏற்றுக்கொண்டு, அவர் குணமாக்கி மன்னித்திருந்தநிலையில், உண்மையாகவே அவருடைய பின்னடியார்களாக எத்தனைபேர் ஆகியுள்ளனர்?

எத்தனைபேர், தாங்கள் மகிழ்ச்சியின்றி இருப்பதை வெளிப்படுத்தி, பாவத்திலிருந்து மன்னிப்புப்பெற ஆவலாயிருப்பதையும் , வாழ்நாள் முழுவதும் அவருக்கு நன்றியுள்ளவர்களாயும், அவருக்கு சேவைசெய்யவும் , அவருடைய தயவைப்பெறவும், தங்களுடைய சிலாக்கியங்களை மறந்துவிடவும் கர்த்தரிடத்தில் வாக்குறுதியளித்துள்ளனர்! ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டபிறகு, ஒருவன் தன் வயலுக்கும் மற்றவன் தன் வியாபாரத்துக்கும், வேறொருவன் உல்லாசத்துக்கும், மற்றொருவன் சம்பிரதாய முறைமைக்கும் திரும்பினர்! சிலர் இரக்கமளிக்கும்படி கர்த்தரிடத்தில் ஜெபித்ததையும், தங்கள் ஜெபங்களுக்கு பதிலளிக்கப்படுமானால், தாங்கள் செய்துகொண்ட தீர்மானங்களின்படி என்ன செய்யவேண்டுமென்று எத்தனைபேர் நினைவுகூறுகின்றனர்?

**வரிசைப்படியான மீட்டுயிர்ப்பித்தல்**

தேவனிடத்தில் உடன்படிக்கை செய்திருப்பவர்கள் ஒரு கடுஞ்சோதனைக்குள் செல்லுகிற காலத்தில் இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று அநேக கிறிஸ்தவ ஜனங்கள் அபிப்பிராயப்படுவதில் வளர்ந்துவருகிறார்கள். அவரது மணவாட்டியாக, கிறிஸ்வின் சரீரமாகிய சபை உயிர்த்தெழுதலில் மாறுதலடைந்து, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும் காலத்தை நாம் நெருங்கியிருக்கிறோம் என்று அவர்கள் நம்புகிறார்கள். “மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது, ஆகவே, “ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே,நாமெல்லாரும் மறுரூபமாக்கப்–படுவோம்”என்று அப்போஸ்தலர் எழுதியிருக்கிறார் **(1கொரிந் 15:50,51)**. இந்த சுவிசேஷ யுகத்தின் அழைப்பு, இயேசுவின் மணவாட்டி வகுப்பாராக தேர்ந்தெடுக்கப்படுவோரை கண்டுபிடிப்பது ஆகும். அவரது இராஜ்யத்தில் இவர்கள் கிறிஸ்துவோடுகூட இணைந்திருப்பர்.

யூத யுகத்தின் முடிவில் அவர்களுக்கான பரீட்சையின் காலத்தில், இயேசு யூதர்களைப் பார்த்துக் கூறினார்; “உங்களை சந்திக்கும் காலத்தை நீங்கள் அறிந்திருக்கவில்லை”. அவர்களில் ஒரு சிலர் மட்டுமே

தேவனிடத்தில் நெருங்கும் இருதய நிலையை உடையோராயிருந்ததினால், அந்நேரத்தின் தன்மையை அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. அதன்மூலம் அவர்கள் ஜீவிக்கும் காலத்தையும், முன்னேற்றமடைந்து வருகிற மாறுதலையும் புரிந்துகொண்டனர். அதற்கொத்த மாறுதல் தற்போதும் நம்மீது உள்ளது என்பதே கூறப்படுகின்ற கருத்தாக இருந்து, யாருக்கு புரிந்துகொள்ளும் கண்கள் திறக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களால் உணர்ந்துகொள்ளப்படுகிறது.

நம் பாடத்தில் சொல்லப்பட்டுள்ள சமாரியன், கர்த்தருடைய நன்றியுள்ள பின்னடியார்கள் வகுப்பாரைக் குறிப்பதாக இருந்து, அவர்கள் தங்கள் வார்த்தைகளினாலும், சிந்தனைகளினாலும், செயல்களினாலும் அவருக்கு மகிமை சேர்க்கத் தேடுகிறார்கள். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் கர்த்தருடைய தயவை எல்லாரையும் போலவே பெற்றிருந்தும், இம்மைக்குரிய வாழ்வின் சந்தோஷங்களையும், குறிக்கோள்களையுமே பின்தொடரும் நடைமுறையிலுள்ளனர். எஜமான் நடந்துசென்ற பாதையில் நடப்பதை அலட்சியப்படுத்துவதால், அவர் அடைந்ததும், அதற்கென்றே இவ்வகுப்பாரைஅவர் அழைத்திருந்ததுமான, மகிமை கனம் அழியாமையை அவர்களால் அடையமுடியாது. அவர்களுக்கென ஒரு தாழ்வான இடமே இருக்கும். சிறிதுகாலத்திற்குள், வியப்பிலுள்ள உலகிற்கு இராஜ்யத்தின் மகிமைகள் வெளிப்படுத்தப்படும் என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் தற்கால மகிமையான நிலைமையின் நடவடிக்கைகள் அப்போது மங்கிப்போகும்.

பரத்திலிருந்து வருகிற உண்மை ஞானத்தின்படி, பிதாவின் சித்தம் செய்வதற்காக நம் இரட்சகர் தம் ஜீவனை அருமையாய் எண்ணாமல், தம் கீர்த்தியை விட்டுவிட்டதினால், தற்போது வெகுமதி அளிக்கப்பட்டு உன்னதத்துக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். பரிசுத்த பவுல் இதே கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார்; கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு இடத்தை வெற்றியாக அடையும் பொருட்டு, அதாவது திரைக்கப்பால் மகிமையடைந்த சபையில் ஒரு அங்கமாவதற்கு, எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாகக் கருதினதாகக் கூறுகிறார். ஆயிரவருட இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் உலகிற்கு உயர்ந்தவைகளாக இருக்கும் அதேவேளையில், சபை அடையவிருக்கும் ஆசீர்வாதங்கள் அதைக்காட்டிலும் மேலானதாய் இருக்கும்.

-----------------

**R 5459**

# "குணலட்சண வளர்ச்சிக்கு சோதனைகள் அவசியம்"

# TRIALS ESSENTIAL TO CHARACTER DEVELOPMENT

**திறவுகோல் வசனம் : "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது..."**
**– யாக்கோபு 1 :2**

இந்த சுவிசேஷ யுகத்தில் கர்த்தரால் அழைக்கப்பட்டிருக்கிற அனைவரும், "மேலான அழைப்பாகிய" பரம அழைப்புக்கு அழைக்கப்பட்டிருப்பதாக( எபி3:14) அப்.பவுல் தன் பாணியில் கூறுகிறார். இந்த அழைப்பானது இயேசுவோடுகூட கனம், மகிமை, அழியாமையில் பங்கடையும் ஒரு அழைப்பாகும். ஆனால் அழைப்பே காரியத்தின் முடிவல்ல. இது சில திட்டவட்டமான நிபந்தனைகளுடன் கூடிய ஒரு அழைப்பு மட்டுமேயாகும். நாம் அழைக்கப்பட்டிருப்பது நீதியை மட்டுமே நோக்கியதல்ல, மாறாக, பாடநுபவித்தல் மற்றும் சுயதியாகம் போன்ற எஜமானருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்காகவுமாகும். கிறிஸ்துவின் சீஷர்களாக ஏற்றுக்கொள்ளப்படும் எவருக்குமான நிபந்தனைகள் இவைதான். ஆயிரவருட யுகத்தில் உலக ஜனங்களை தேவன் ஏற்றுக்கொள்ளும்படியான நிபந்தனைகள் வேறுவிதமாக இருக்கும் என வேத வசனங்கள் கற்பிப்பதை நாம் புரிந்திருக்கிறோம். ஆனால் இயேசுவின் சீஷர்களாக வருபவர்கள் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும் என்கிற நிபந்தனைகளைத் தவிர வேறு நிபந்தனைகள் எவையும் தற்போது இல்லை.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை கண்ணியில் விழவைப்பது போன்ற சோதனைகள் அவர்களை முறியடிக்கக்கூடும் என யாக்கோபு தெரிவிக்கிறார். ஒரு இராணுவத்தை பொறுத்தவரையில், எதிரிகளால் கண்ணிகள் வைக்கப்படுகிறது. அதுபோலவே மாபெரும் எதிராளியானவன், கண்ணிகளையும் பொறிகளையும் நமக்கெதிராக வைக்கிறான். நீதி மற்றும் சத்தியத்தை முறையாகப் புரிந்துகொள்வதிலிருந்து விலகச்செய்யும்படி நம்முடைய மனதை தவறாக வழிநடத்துவதற்கு பெருமுயற்சி செய்கிறான். அவனுடைய கண்ணிகளைத் தவிர்ப்பதில் நாம் வெகு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம்

விழிப்புள்ளவர்களாயிருந்தபோதிலும், நாம் அந்த வலையில் விழக்கூடும்.

நாம் பல்வேறு சோதனைகளில் அகப்படும்போது, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணவேண்டும் என அப்போஸ்தலர் கூறுகிறார். அதாவது, சோதனையின்போது பாவத்தில் விழுந்தால் நாம் சந்தோஷப்படவேண்டும் என்பதல்ல. மாறாக, திடீரென துரிதமாக சோதனையில் நாம் அகப்பட்டிருக்கக் கண்டோமானால், அதிக மகிழ்ச்சியடையலாம். சோதனையானது பாவம் அல்ல. நாம் மனதில் கொள்ளவேண்டிய விஷயம் என்னவெனில், ஒவ்வொரு சோதனையும், பரீட்சையும் உபத்திரவமும், வாழ்வில் ஏற்படும் பிரச்சனையும், கர்த்தருடன் பலியினால் உடன்படிக்கை செய்த நம்மேல் ஏன் அனுமதிக்கப்பட்டிருக்கிறதெனில், நாம் நிரூபிக்கப்படவும், நம்முடைய அன்பை பரிசோதிக்கவும், நம்முடைய குணங்கள் நீதியின் பேரில் உறுதியாக நிலைநாட்டப்பட்டு, வேரூன்றி இருக்கிறதா அல்லது இல்லையா எனவும், அக்குணங்கள் அன்பினால் கட்டமைக்கப்பட்டிருக்கிறதா என காண்பதற்கானதாகும். இது இந்த எல்லா பரீட்சைகளையும், சிரமங்களையும், சோதனைகளையும் ஒரு புதிய வெளிச்சத்தில் நமக்கு முன்பாக வைப்பதோடு, நல்ல போராட்டத்தைப் போராடும்போது நமக்கு பெரிதும் உதவிகரமாக இருப்பதுடன், ஜெயங்கொள்ளவும் உதவுகிறது. நாம் திடீரென சோதனையிலோ, பரீட்சையிலோ அகப்பட்டிருக்கக் காணும்போது, அவ்விதமான சோதனைகள் மற்றும் பரீட்சைகளினால் கர்த்தருக்கு முன்பாக என்னுடைய அன்பையும், அவரிடத்திலான பக்தியையும் நிரூபிக்கவே அனுமதிக்கப்பட்டிருப்பதை உணரமுடியும். அவைகள் எவ்வளவு அற்பமானதாகவோ அல்லது முக்கியமானதாகவோ இருந்தாலும், கர்த்தருக்கு முன்பாகவும், அவருடைய ஊழியத்திற்காகவும், என்னுடைய முழுமையான அன்பையும் பக்தியையும் காண்பிக்கும் அநுகூலமான வாய்ப்புக்களாக ஜாக்கிரதையுடன் பயன்படுத்திக்கொள்வேன் எனவும் கூறமுடியும். இதற்கு எதிராக உள்ள, உலகம் மாம்சம் அல்லது எதிராளியின் மூலமாக எப்படிப்பட்ட வலை விரிக்கப்பட்டாலும், நான் ஒரு நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும் எனவும் கூறலாம்.

இவ்வாறு நாம் பார்க்கும்போதும், அவ்விதமான ஒவ்வொரு அனுபவங்களை நாம் சந்திக்கும்போதும் மகிழ்ச்சியடையலாம். ஒவ்வொரு பரீட்சையும் ஒவ்வொரு சிரமங்களும் ஒரு ஆசீர்வாதம் என நிரூபிக்கிறது. நாம் முதலாவதாக, கர்த்தருடைய ஊழியக்காரர்களாக, நம் சொந்த ஸ்தானத்தையோ அல்லது அவர் நிமித்தமாகவோ சமரசம் செய்யாதிருந்து, நாம் சகித்துக்கொள்வோம் என்பதை கர்த்தருக்குக் காண்பிக்கும் வாய்ப்பை அடைவோம். ஏனெனில் அந்த சோதனைகளின்கீழ், நாம் வெற்றிபெற்றால் நம்முடைய குணநலன்களானது படிகம்போல் உறுதியாகுதலை நோக்கி முன்னேறும் என்பதை நாம் அறிந்திருப்பதால் நாம் மகிழ்ச்சியடையலாம். ஏனெனில் நாம் முழுவதும் உண்மையுள்ளவர்களாக இருக்கும் பட்சத்தில், நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவராத எந்தவொரு சோதனையிலும் விழுந்துபோகும்படி நம்மை கர்த்தர் விடமாட்டார் என அறிந்திருக்கிறோம். நாம் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளில் தொடர்ந்து நிலைத்திருப்போம் : “ என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது..” – யாக் 1:2. “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்” – யாக் 1:12.“அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் – 1பேதுரு1:7. இவைகளை சரியாக நாம் பயன்படுத்தினோமானால், அவற்றை நாம் சரியாக பயிற்சி செய்தோமானால், அதிசீக்கிரத்தில் நீங்கும் நம் லேசான உபத்திரவம் அதிக மேன்மையையும், நித்திய கனமகிமையும் உண்டாக்கும்.

**சகித்துக் கொள்பவன்**

கர்த்தரை நேசிப்பவர்களும், அதன் காரணமாக இராஜ்யத்தைப் பெறுபவர்களும், அவர்கள் போகும் வழியில் சந்திக்கும் பரீட்சைகள் மற்றும் சோதனைகளின்மூலம் அவர்களுடைய அன்பின் குணங்களானது பரிசோதிக்கப்படும். தங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரை அன்புகூறாதவர்கள், சுயத்தையோ அல்லது வேறெந்த விக்கிரகத்துக்கு ஒப்பானதையோ முதலிடத்தில் வைத்தால்,

உலகம் மாம்சம் பிசாசு இவைகளினால் ஈர்க்கப்படுவதுடன், தெய்வீக வார்த்தைகளுக்கும் வழிநடத்துதல்களுக்கும் எதிராக ஏதோ ஒரு வகையில் கலகக்காரராகி விடுவார். அவர்கள் கர்த்தருடைய திட்டத்திற்கு முன்னுரிமை தருவதுபோன்ற யோசனைகளையும், கோட்பாடுகளையும் பெற்றிருப்பர். ஆனால் இவர்களை பகுத்தாராயும்போது, பொதுவாக சுயநலத்தின் அடிப்படையிலோ அல்லது பேராசையின் அடிப்படையிலோ அல்லது பொறாமை மற்றும் வெறுப்பு போன்ற அசுத்தஆவியின் அடிப்படையில் காணப்படுகிறார்கள். கர்த்தருடைய வழிகாட்டுதலும் மற்றும் அவரது வார்த்தைகளும் அப்படிப்பட்டவர்களை தன் வசம் ஈர்க்கும் சக்தியை இழந்துவிடும். அதுபோலவே அவர்களும் அவர்களுடைய ஆர்வத்தை இழந்துவிடுவார்கள். அவர்களைப்போலவே கர்த்தருடைய முதல் வருகையிலும் அவரைவிட்டு திரும்பிச்சென்றவர்கள், “இது கடினமான உபதேசம்” எனக்கூறி, அதுமுதல் அவரோடுகூட நடக்கவில்லை.

சிறியதும் சுலபமாக உடையக்கூடிய பொருட்கள் இருப்பதுபோல, நார் போன்ற பலமான மற்றும் உடையாத, உறுதியான பொருட்களும் உள்ளன. அப்படிப்பட்ட பலமான, தாங்கும் தன்மைகளுடைய குணாதிசயங்களாகிய தைரியம், பொறுமை, நீடிய பொறுமை போன்ற குணமுடையவர்களை கர்த்தர் தமக்கென தேர்ந்தெடுக்கிறார். கர்த்தரோடுகூட மிகவும் நெருக்கமாக சிலர் நடந்துகொண்டிருப்பார்கள். பிசாசினுடைய எந்தவொரு சூழ்ச்சியும், வஞ்சகமும் அந்நபர்களை அவரிடமிருந்து பிரிக்கமுடியாது. அவர்கள் இருதயப்பூர்வமாக முற்றிலும் கர்த்தருடையவர்களேயன்றி தங்களுக்குரியவர்களல்ல. கர்த்தர் அவர்களை எங்கே வழிநடத்தினாலும் அங்கே பின்தொடர்கிறவர்களாக இருப்பர். ஏனெனில் தேவசித்தத்தைத் தவிர, வேறுசித்தம் அவர்களிலில்லை. தற்கால வாழ்க்கையின்போது சோதனை, ஒழுக்கம் மற்றும் பரிசோதனையின் நெருக்கமான பாதையில் அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவார்கள். பின்னர் கர்த்தர் கூறியதுபோல படிப்படியாக, “அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடுகூட நடப்பார்கள்” – வெளி 3:4.

எல்லா சோதனைகளிலிருந்தும், தூண்டுதல்களிலிருந்தும், பிரச்சனைகளிலிருந்தும் தப்பிக்கிற ஒருவர், தேவனுடைய புத்திரனாக, தேவனோடு ஐக்கியத்திலிருக்கிறாரா என்று சந்தேகிப்பதற்கான எல்லாக் காரணங்களும் உள்ளன. அவர் ஒரு மகனாக இருப்பாரானால், அவருக்கு சோதனைகளையும் கஷ்டங்களையும் தரவேண்டியது அவசியம் என கர்த்தர் உறுதியாய்க் கண்டிருப்பார். அவர் இம்மாதிரி சோதனைகளை அடைந்திருக்கவில்லையென்றால், அவர் பிதாவிடம் சென்று தன்னுடைய தரப்பில் எந்தவிதமான தடையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். எவ்வாறெனில், அவர் இராஜ்யத்திற்குத் தயாராக இருக்கக்கூடிய சரியான இடத்தில் தன்னை வைத்துக்கொண்டிருக்கிறார் என உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். “கர்த்தர் எவரிடத்தில் அன்புகூறுகிறாரோ, அவரை அவர் சிட்சிக்கிறார்” – எபி 12:6.

**தோல்விகள் படிக்கற்களாகும்**(Failures as stepping- stones)

சோதனைகள் முடிவடைந்தவுடன் நாம் ஜெயம்கொண்டவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கர்த்தருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட பங்கடைபவர்களானதால், அனைவரும் மிக்க மகிழ்ச்சியடைவோம். ஆனால் நம் இருதயங்களில் பொறுமை, நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவை ஒரு சுத்திகரிப்பு வேலையைச் செய்து, நம்மை மென்மையானவர்களாக்கி, தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பவர்களாக்க வேண்டும். இந்த ஒரு நல்லவேலை தொடரட்டும்! நம்முடைய சோதனைகள் நம்மை குணநலன்களில் வலிமையுடையவர்களாகவும், மிகவும் தாழ்மையுள்ளவர்களாகவும், கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாகவும் ஆக்குமானால் மிகவும் சந்தோஷமடையலாம். மேலும் நம்முடைய கறைதிறைகள் மற்றும் பெலவீனங்களைப் பற்றி அதிக விழிப்புள்ளவர்களாக்கி, முடிந்தவரை அவற்றை சரிசெய்யும்படி, நம் முயற்சிகளில் அதிக ஊக்கமுடையவர்களாக்கினால் மிகுந்த மகிழ்ச்சியடையலாம்.

நாம் பெற்ற போராட்டங்களில் ஓரளவே வெற்றிபெற்றிருந்தாலும்கூட, நமக்கு அது ஆசீர்வாதத்தை அளித்திருக்கலாம். அம்மாதிரியான அனுபவங்களில் நாம் முழுமையான தோல்வியை சந்தித்தாலும்கூட, அதினால்அவமானம் மற்றும் தோல்வியின் வேதனை, நம் குணங்கள் வலிமையாகுதல், அத்திசையில் அதிக கவனத்துடன் இருப்பதற்கான உறுதியான தீர்மானம், மற்றும் கர்த்தருடைய காப்பாற்றும் கிருபைக்காக வேண்டிடும் அதிக உருக்கமான ஜெபம் போன்ற தேவைகளை நம் இருதயங்களில் ஆழமாய் பதியவைத்திருக்கும். இவ்வகையில் நம்முடைய

தோல்விகள்கூட, நாம் தேவனையும் பரலோகத்தையும் நோக்கி எழும்படியான படிக்கற்களாக மாறக்கூடும். அநேக உபத்திரவங்களின் வழியாக மாத்திரமே நாம் பரலோக இராஜ்யத்தை அடையமுடியும். ஆகவே கர்த்தருடைய ஜனங்கள் தங்களை உபத்திரவங்களிலும் சோதனைகளிலும் அகப்பட்டவர்களாக இருக்கக்கண்டால், அவர்கள் மனச் சோர்வடைவதற்குப் பதிலாக, மிக்க மகிழ்ச்சியடைந்து சொல்லவேண்டியது என்னவெனில்; இவைகள் தேவனுடைய இராஜ்யத்தில் எனக்கு ஒரு இடத்தை கர்த்தர் தயார் செய்கிறார் என்பதற்கான சாட்சிகளாயிருக்கின்றன என்பதே. இது உலகத்தையும், மாம்சத்தையும், எதிராளியையும் எதிர்த்து ஒரு நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கான தைரியத்தை நமக்கு அளிக்கவேண்டும். இச்சமயத்தில் மாம்சமானது மிகுந்த துன்பப்படுகிறது. ஆனால் புது சிந்தையோ, புது சித்தமோ இந்த மகிழ்ச்சியைப் பெற்றிருக்கிறது. இம்மாதிரியான சோதனைகள் நன்மைக்கானதேயன்றி, தீமைக்கானதல்ல என அறிந்திருப்பதால், புது சிருஷ்டியானது களிகூறமுடியும் – 1பேது4:13. ‘‘கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்’’.

**தப்பிக்கும் வழி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது** (A way of escape provided)

பரலோகத்தின் தகப்பன் ஒவ்வொரு சோதனையிலும் தப்பிப்பதற்கான போக்கையும் ஏற்படுத்துவார். ஆகவே நாம் ஒரு கஷ்டத்தில் அகப்பட்டிருக்கக் கண்டால், பரலோகத்தின் பிதா இந்த சோதனையை அனுமதித்திருக்கிறார் என்றும், கர்த்தராகிய இயேசு எனக்கு உதவுவார் என்றும் சொல்லலாமே. இதனால், உண்மையாகவே நான் தூக்கியெறியப்படும்படி கர்த்தர் அனுமதிக்கமாட்டார் என்பதால் மிக்க மகிழ்ச்சியடைவேன். ஏனெனில் என் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறாரே.

நாம் சோதனைகளில் அகப்படும்போது, அவைகளை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் என நம்முடைய ஆதார வசனம் வெளிப்படையாகக் கூறுகிறது. அதாவது, அச்சோதனைகளுக்குள் நடக்கும்போது அல்ல. நாம் சோதனையை நாடக்கூடாது, நம்முடைய சொந்த விழுந்துபோன நிலைமையிலும், நம்மை சுற்றியுள்ளவர்களினாலும், நமக்கு தீங்கு விளைவிக்க எப்போதும் காத்திருக்கிற எதிராளியோடு சேர்ந்து நாம் அவைகளில் நடக்காதபோதே, ஏராளமான சோதனைகள் வரும். ஆனால் நாம் அச்சோதனைகளில் அகப்படுவோமானால், அதை எதிர்த்து நான் போராடிக்கொண்டிருக்கிறேன், ஏனெனில் கர்த்தர் அதை அனுமதித்திருக்கிறார், அதினால் சில ஆசீர்வாதங்கள் எனக்காக அங்கே கண்டிப்பாக இருக்கும் என நாம் சொல்லலாம். அலட்சியத்தினால் ஒருவேளை சோதனைகள் வந்தாலும்கூட, அவைகளும் குறைவாக மதிப்பிடக்கூடாத ஒன்றாகும். கவனமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டிய மாபெரும் பாடங்களில் சில, நம்முடைய கவனக்குறைவினால் ஏற்பட்ட பாதிப்புகளின் பலன்களாக இருக்கிறது.

நம்முடைய சந்தோஷம் பெரும்பாலும் தேவ வார்த்தையை தியானிப்பதிலும், அதிலுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களைப் பற்றிய நம் அறிவைச் சார்ந்தது. அவைகள் ஜெயங்கொள்ளுகிறவர்–களுக்கானது. பல இன்னல்கள் மேலும் மேலும் கடுமையானதாக இருந்தபோதிலும், சோதனைகள் நீண்ட காலம் தொடர்ந்தபோதிலும், பெரிய துன்பங்களை சகித்து போராடுபவர்களை கர்த்தர் விரும்புகிறார். ஆனால் அவர்கள் விசுவாசத்தை இழக்க நேரிட்டால், அவர்களின் முந்தைய நல்ல தீர்மானங்கள் மற்றும் சரியானவற்றிற்காக அவர்கள் நிலைத்து நின்றது ஆகியவை அவர்களை ஜெயங்கொண்டவர்களாக மாற்றாது.

இந்த சோதனைகள் நமக்குள் பொறுமை என்கிற குணத்தை வளர்க்கவும், அதை ஆழமாகப் பதியச்செய்யும் நோக்குடனும் தரப்படுபவையாகும். நித்தியக் காலத்திற்கும் நாம் குணநலன்களை எடுத்துக் கட்டுகிறோம். மேலும் பொறுமை என்பது மீண்டும் மீண்டும் வரும் துன்பங்களினாலும் பரீட்சைகளினாலும் மட்டுமே வளர்ச்சியடைவதுடன், அதை தக்கவைத்துக் கொள்ளவும் முடியும். அதாவது, மீண்டும் மீண்டும் எடுக்கப்படும் தீர்மானங்கள் மூலம் நாம் உறுதியாவதற்கும் மற்றும் பரலோகப்பிதா மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் குணநலனுக்கு ஒத்த சாயலுக்கு பலமான முறையில் கட்டப்படுவதற்கும், இச்சோதனைகள் மற்றும் இன்னல்களைத் தவிர வேறுவகையில் வளர்த்துக்கொள்ள முடியாது.

**எச்சரிப்பின் வார்த்தை**(A word of warning)

இந்த அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பாருக்கும், கிறிஸ்துவின் உண்மையுள்ள சீஷர்களுக்குமென

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமையை அடைய முயற்சிப்பவர்களுக்கும், அப்.பேதுரு ஒரு எச்சரிப்பின் வார்த்தையைத் தருகிறார். இரண்டாம் நிருபம், முதல் அதிகாரத்தில், உண்மையுள்ளவர்களுக்கென தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கும் மகிமையான காரியங்களுக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாகும்படி, சபையானது குணாதிசயங்களில் ஆயத்தமாகும்படி, ஒவ்வொரு குணத்தின்மேல் ஒரு குணத்தை கூட்டிக்கொள்ளும்படியாக வலியுறுத்துகிறார். அவர் விசுவாசத்தையே முதன்மையான தகுதியாக குறிப்பிடுகிறார். இதற்காக, விசுவாசத்தோடுகூட தைரியத்தையும், ஞானத்தையும், பொறுமையையும், இச்சையடக்கத்தையும், தேவபக்தியையும், சகோதர சிநேகத்தையும், முழு மனுக்குலத்தின்மேல் பரந்துவிரிந்த அன்பையும் கூட்டி வழங்கும்படி அவர் கூறுகிறார். நம்முடைய நியாயத்தீர்ப்பு நமது விசுவாசத்தின்படியே இருக்கும் என வேத வாக்கியங்கள் அறிவிப்பதற்கான காரணம் என்னவெனில், நாம் மாம்சத்தில் இருக்கும்வரையில், தேவன் அங்கீகரிக்கக்கூடிய செயல்களை நம்மால் ஒருபோதும் செய்யமுடியாது என்பதேயாகும்.

தேவன் ஏற்றுக்கொள்வது எதுவெனில், புதிய சிருஷ்டியையே ஆகும். விசுவாசத்தை பயிற்றுவிப்பதினாலும், உண்மைத்தன்மையை வெளிப்படுத்துவதினாலுமே புதிய சிருஷ்டிகள் அவரை பிரியப்படுத்தமுடியும். அதோடுகூட அவருடைய வார்த்தையில் கட்டளையிட்டுள்ளபடி, முறையான குணத்தைஅடைய பிரயாசப்படவும், பரிசுத்தஆவியின் கிருபையிலும் கனிகளிலும் வளரவும் முடியும். அப்போஸ்தலர் கூறுகிறபடி, இவைகளைச் செய்தால் நீங்கள் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய் நமது கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பூரணமாய் அளிக்கப்படும் – 2பேதுரு1 : 10,11.

எல்லா வகையிலும் விசுவாசமே அவசியமானது. விசுவாசமின்றி நாம் முன்னேறிச்செல்ல நமக்கு தைரியமிராது. நாம் விசுவாசமின்றி இருப்போமானால், ஊக்கமும் உற்சாகமுமடைய வேறு என்ன ஆதாரமிருக்கிறது ? 2பேதுரு1:10 இல், நாம் அழைக்கப்பட்ட அழைப்பிலிருந்து வீழ்ச்சியடைவதைப்பற்றி வெளிப்படையாக கூறப்பட்டுள்ளது. நம்முடைய கர்த்தரோடுகூட உடன் சுதந்திரவாளிகளாவதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிகிறவர்களாயிருந்து, கிறிஸ்துவின் பள்ளியில் நமக்குத் தரப்படும் அனுபவங்களை முறையாக பயன்படுத்தினோமானால், அவருடைய அங்கீகரிப்பை நாம் பெறுவோம். ஏனெனில் "நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே". நம்முடைய விஷயத்தில் வீழ்ச்சி ஏற்பட்டால், அது நம்முடைய பங்கை செய்யத் தவறியதன் காரணமாகவே இருக்கும். நம்முடைய குணநலன்களை வளர்க்கத் தவறினோமேயானால், இராஜ்யத்தையும் பெறத் தவறினவர்களாவோம்.

**விழுகைக்குத் தூண்டும் காரணங்கள்**(Causes inducing a fall)

வீழ்ச்சியடைபவர்களில் சிலர், மற்றவர்களைவிட அதிக தீவிரமான வீழ்ச்சியடைகிறார்கள்.தொடர்ந்து முன்செல்ல தவறியவர்கள் சில சோதனைகளைப் பெறுவர். அச்சோதனைகள் அவர்கள் மீண்டும் உலகிற்கே திரும்பிவிடுவார்களா, அல்லது நெருக்கமான பாதையில்தொடர்வார்களா ? எனத் தீர்மானிக்கும். சிலர் போதுமான வைராக்கியத்தை வெளிப்படுத்தாமல் அச்சோதனைகளில் தோல்வியடைவார்கள். இவர்கள் பெரும் உபத்திரவங்களின் மூலம் வருவார்கள். இம்மாதிரியான அனுபவங்களால் அவர்கள் கர்த்தருக்கு முழுமையாக உண்மைத் தன்மையுள்ளவர்களாக கொண்டுவரப்படுவார்களானால், அவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும். ஆனாலும் கர்த்தருக்கான வைராக்கியத்தினை வெளிப்படுத்தவும், விசுவாசம், ஆற்றல் மற்றும் கர்த்தருடைய சித்தத்தை விடாமுயற்சியோடு செய்வதிலும் தோல்வியடையாதிருந்தார்களானால், அவர்களுக்கு நித்திய ஜீவன் கிடைக்கும், ஆனாலும், உயர் மட்டத்திலான உன்னத ஜீவனை இவர்கள் அடைவதில்லை.

மறுபடியும், கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியம் குறைந்த நிலைமையிலிருந்தும், கசப்பான மனப்பான்மையை வளர்ப்பதிலிருந்தும் கர்த்தருடைய எதிரியாகி, நீதியைவிட பாவத்தை நேசிக்கிறவராகும் அளவிற்கு மோசமானவராகக் கூடும். தேவனுடைய எதிரியாக மாறுகிற அப்படிப்பட்டவர், முழுமையான வீழ்ச்சியினால் துன்புறுவார். ஆனால் தற்காலிக வீழ்ச்சியை அடைபவர்களோ, கர்த்தர் அவர்கள்மேல் வர அனுமதித்த சோதனைகளில் பின்பு ஜெயங்கொண்டு, அதினால் தங்களுடைய உண்மைத்தன்மையை காண்பிப்பார்களானால், அவர்கள் முழுமையாக குணப்படுவார்கள். முற்றிலும் வீழ்ச்சியடைந்தவர்களை ஒருபோதும் குணப்படுத்தமுடியாது. அப்படிப்பட்டவர்கள் எல்லாவற்றையும் இழந்துபோவார்கள். அவர்கள்

ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பே, தங்களுடைய மனித நம்பிக்கைகளை தியாகம் செய்திருந்தார்கள், எனவே இந்த புதிய சிருஷ்டிக்கான நிலைமையிலிருந்து வீழ்ச்சியடைவது, அது ஒரு நம்பிக்கையில்லா வீழ்ச்சியாகும்.

அத்தகைய வீழ்ச்சி ஆதாமின் வீழ்ச்சியைவிட மிக மோசமானதாக இருக்கும். ஆதாமின் வீழ்ச்சியானது குறைந்தபட்ச அறிவினாலும், தீமையின் விளைவுகளில் அனுபவம் இல்லாததாலும் விளைந்தது, ஆனால் புதிய சிருஷ்டியின் வீழ்ச்சியோ, சத்தியத்தை அறிகிற தெளிவான அறிவைப் பெற்றிருந்து, மீட்பில் பங்கடையும் அனுபவத்தைப் பெற்றிருந்த பின்பு ஏற்படுகிற வீழ்ச்சியாகும். இப்படிப்பட்டோர் விழுந்துபோவது, நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலையும், தேவனுடைய விரோதிகளை பட்சிக்கும் கடுஞ்சினத்தின் அக்கினியையுமே அர்த்தப்படுத்துகிறது. ஆதாமுக்கு தேவகிருபையைப் பற்றிய குறைவான அறிவு மட்டுமே இருந்தது. எனவே அவர் தேவனுக்கு இசைவாக வரும்போது, மீட்கப்பட்டு பின்பு சீர்பொருந்தவேண்டும்.

அன்பான சகோதர சகோதரிகளே, நம்முடைய வழிகளில் கவனம் செலுத்துவோமாக. ஆவியின் கனிகளை நாம் மிகுந்த ஆர்வத்துடன் உற்பத்தி செய்வோமாக. அதினால் “தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே... மாசற்றவர்களாய்” நாம் நிச்சயமாகவே நிலைநிறுத்தப்படுவோம், ஆமென்!

மகிமையின்மேல் மகிமை –
எப்போதும் முன்பாக வைக்கப்பட்டுள்ளது,

இன்னும் அதிகஆச்சரியமூட்டுகிறது,
ஆராதிக்கிறது, சந்தோஷமடைகிறது,

அவர் எங்கு நடத்தினாலும் இடத்திலிருந்து மறுஇடத்திற்கு பிரகாசிக்கிறது இன்னும் தொடர்கிறது,

மகிமையின் இலக்கும், வெளிப்படுத்துபவரும், வெளிப்படுத்தினவரும் அவரே,

ஆகவே உண்மை மகிழ்ச்சிகள் கண்டடையப்படும்போது, நம் இருதயங்கள் உறுதியாய் நிலைக்கட்டும்,

நம் அனலும், அன்பின் துதியும் இன்னும் அதிகதிகமாய் பெருகட்டும்,

ஆகாயத்தில் காணப்படாத நித்தியமானவைகள் மீது கருத்தூன்றிய பார்வை கொள்,

ஓ! இரட்சகரே, “மகிமையின்மேல் மகிமைக்கு”
இணைந்து எழும்புவோமாக!

----------

**R 5460**

# “தேவனுடைய இஸ்ரயேல்”

# “THE ISRAEL OF GOD”

**திறவுகோல் வசனம் : 1பேதுரு 2::9 “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்தஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்”**

கிறிஸ்துவின் சபை மற்ற ஜனங்களிடமிருந்து வேறுபட்டிருப்பதாகவும், தனித்துவம் வாய்ந்ததாகவும் உள்ளது என நமது திறவுகோல் வசனத்தில் அப்போஸ்தலர் பேதுரு குறிப்பிடுகிறார். நமது கர்த்தர் வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், யூதர்கள் தாங்கள் தேவனுடைய ஜனங்கள் என புரிந்திருந்தனர். மோசேயின் மூலமாக அவர் அவர்களுடன் விசேஷித்த உடன்படிக்கை செய்திருந்ததால், அதன்மூலம் அவருடைய பிள்ளைகளாக அவர்களை ஏற்படுத்தியது. அவர்களுக்கு சில வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருந்தார், அது அவர்கள் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதை சார்ந்திருந்தது. இவ்வாறாக, சில விசேஷித்த வாக்குத்தத்தங்களுக்காக அவர்கள் அவருடைய தெரிந்தெடுக்கப்பட்ட சுதந்தரவாளிகளாக இருந்தது, அவர்களது கீழ்ப்படிதலை நிபந்தனையாக கொண்டிருந்தது. அதோடுகூட, குறிப்பிட்ட நிபந்தனைகளில்லாத மற்ற வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. தேவன் அவர்களிடத்தில் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தப்போவதாகவும், அவர்களிடமிருந்த கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, ஒரு புதிய இருதயத்தை அவர்களுக்குத் தருவதாகவும் வாக்களித்திருந்தார். ஆனால் முதலாம் வருகைக்குப்பிறகு, ஒரு வேறுபட்ட ஏற்பாடு துவங்கியது.

சுவிசேஷயுகத்தின்போது விசேஷித்த ஜனங்களை அழைக்கும் தேவனுடைய திட்டத்தின் புதிய அம்சத்துக்கு அப்போஸ்தலர் கவனத்தைத் திருப்புகின்றார். புதிய தேசம் மற்றும் இஸ்ரயேல் தேசம் ஆகிய இரு வகுப்பினர்களுக்கு இடையே போட்டிகள் ஏற்படுவதில்லை. ஏனென்றால் மாம்சீக இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள்

பூமிக்குரியவை. ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்டதோ ஆவிக்குரியவை. யூதர்கள் விசித்திரமான ஜனங்கள்(உபா14:12). உலகத்தினின்று தேவன் பிரித்தெடுத்திருந்த விசேஷித்த ஜனங்கள். அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததி அல்லது ஜாதியாக, ஈசாக்கு மற்றும் யாக்கோபு மூலமான ஆபிரகாமின் தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததி அல்லது ஜாதியாக இருந்தனர். தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த முந்தைய வாக்குத்தத்தங்களின்படியேயும், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமும், இந்த விசேஷித்த சந்ததியாகிய யூதர்கள், இஸ்ரயேலர்கள் தேவனால் தம்முடைய ஜனங்களாக அங்கீகரிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து, உலகத்தில் மற்றொரு வேலையை தேவன் துவங்கியுள்ளார். வேறொரு விசேஷித்த சந்ததி, குறிப்பிட்டதோர் நோக்கத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த சந்ததியினர் அனைவரும் பரிசுத்தமாய் இருப்பார்கள். பரிசுத்தவான்களைத் தவிர வேறொருவரும் அதில் இருப்பதில்லை. முந்தைய ஜாதியினருக்கு ஆசாரியத்துவம் இருந்தது, ஆனால் இந்த புதிய ஜனங்கள் முழுவதும் ஆசாரிய இராஜ்யமாய் இருப்பார்கள்._சபைக்கு இந்த விளக்கம் எவ்வாறு பொருந்துகிறது என்று நாம் காண்கிறோம். ஆரோனும் அவர் குமாரர்களும் சில வகைகளில் அடையாளமாக இருப்பதாக அப்போஸ்தலர் பவுல் சுட்டிக் காட்டினாலும், தேவனுடைய திட்டங்களின் அனைத்து அம்சங்களிலும் அவர்கள் அடையாளமாகக் குறிக்கப்படுவதில்லை. இயேசு எவ்வாறு ஒரு பலியாக மரிப்பார், அவரின் அனைத்து பின்னடியார்களும் எவ்வாறு பலி செலுத்துபவர்களாக இருப்பார்கள் என்பதை அவர்கள் அடையாளப்படுத்தினார்கள். ஆனாலும் லேவியர்களின் ஆசாரியத்துவத்தினை தேவன் நிறுவினபோது, அவர் மனதில் கொண்டிருந்த உயரிய ஆசாரியத்துவத்தை ஆரோனும் அவரது குமாரர்களும் அடையாளப்படுத்துவதில்லை. இந்த உயரிய ஆசாரியத்துவ முறைமை, இராஜாவும் ஆசாரியருமான மெல்கிசேதேக் முறைமையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது(எபி 6:20).

**எதிர்காலத்தில் சபையின் இரட்டிப்பான அலுவல்**

இயேசுவானவர் தாமே இந்த உயரிய ராஜரீக அல்லது, இராஜ ஆசாரியராகவும், அவரது சபை இந்த நிஜமான மெல்கிசேதேக்கின் சரீரமாகவும் உள்ளது. புதியமுறைமையின்படி இராஜாக்களாக ஆளுகை செய்யும் முன்னரும், ஆசாரியர்களாக ஊழியம் செய்யும் முன்னரும், ஒருசில வழிமுறைகளினூடாய் அவர்கள் கடந்து செல்லவேண்டும். இந்த கிறிஸ்துவின் சரீரமாகிய உறுப்பினர்கள் முதலாவது உருவாக்கப்படவேண்டும். இது ஒரு புதிய சந்ததி, அனைவரும் பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். இயேசு தமது உடன்படிக்கையின்போது, பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டு, புதுசிருஷ்டியாகி, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவராக இருந்ததுபோல, அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்றவர்களாகிய சபையும், அவர்களில் இந்த புதிய உருவாக்கப்படுதலின் வல்லமை செயல்பட துவங்குமுன், அவர்கள் முதலாவது முழுமையான அர்ப்பணிப்பு செய்தல் வேண்டும்.

இந்த வல்லமையானது கர்த்தராகிய இயேசு ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதிலிருந்து செயல்படத் துவங்கி, அவரது உயிர்த்தெழுதலில் நிறைவடைந்தது. அதுபோன்றே, நம்மிடையேயும் இருக்கும். மரணபரியந்தம் நாம் நமது உண்மைத்தன்மையை நிரூபிக்கும்போது, இவ்வல்லமையானது தன் பணியை நிறைவேற்றி முடிக்கும். ஆசாரிய வகுப்பார் அனைவருக்குள்ளும் இப்பணி நிறைவேற்றப்பட்டிருக்கும்போது, உண்மையாகவே அவர்கள் பரலோக மட்டத்தில் அப்பொழுது ராஜரீக ஆசாரியக்கூட்டமாக இருப்பர். பரிசுத்தஆவியின் இந்த வல்லமை, உருவாக்குகின்ற அல்லது ஜெநிப்பிக்கின்ற வல்லமை மட்டும் அல்ல, மாறாக அது அபிஷேகம் பண்ணும் வல்லமையாகும். ஆசாரியத்துவப் பணிக்கு மாத்திரம் அல்லாமல், ராஜரீகத்துவத்திற்கும் உரியதாக இந்த அபிஷேகம் இருக்கும். விசேஷித்த அரசின், தெய்வீக அரசின் பிரதிநிதிகளாய் இவர்கள் இருப்பதால், இந்த புதிய சிருஷ்டிகள் பரிசுத்த ஜாதியாராவர்.

**பரிசுத்த ஜாதி – நிழலும் பொருளும்**

பரிசுத்த ஜாதியாய் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், அடையாளமான வழியில் இஸ்ரயேலர் பரிசுத்த ஜாதியாயிருந்தனர். ஆனால் பரந்த நோக்கத்தில், சபை மனுக்குலத்தினின்று பிரித்தெடுக்கப்பட்ட விசேஷித்த பரிசுத்த ஜாதியாக உருவாகின்றது. உலக மனுக்குலத்தின் மத்தியில் வாழும் நாம், ஒவ்வொரு விதத்திலும் பிரித்தெடுக்கப்பட்ட ஜாதியினராக இருக்கிறோம். நாம் நமது

பிரமாணங்களையும் அவர்களது பிரமாணங்களையும் கைக்கொள்கின்றோம். நாம் அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் – இவைகளை கர்த்தர் அனுமதித்திருக்கிறார் என்றும், நாம் அவைகளுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென விரும்புகிறார் என்றும் உணர்ந்து, அங்கெல்லாம் நம் மனசாட்சிகள் பலிசெலுத்தப்படாது. கர்த்தருடைய இராஜ்யத்தின் பிரதிநிதிகளாக அவரது செய்தியை நாம் அறிவிக்க வேண்டுமென்று நமக்குக் கூறுகின்றார். அவர்கள் எதிராளியினால் குருடாக்கப்பட்டிருப்பதன் காரணமாக, உலகம் கலகம் புரிகிற சூழலில் உள்ளதாக அவர் நமக்குக் கூறுகிறார்.

ஆகவே அவரது நன்மையையும், அவர் நிறைவேற்ற தீர்மானித்திருக்கிற அவரது திட்டங்களையும் மனிதரிடத்தில் கூறவும், அவரது செய்திக்கு செவிகொடுக்கும் காதுள்ளவர்களின் இருதயத்தை கர்த்தரிடமாய் திரும்பப் பண்ணுவதற்கு தூதராக நம்மை அனுப்புகின்றார். இந்த செய்திக்கு அநேகர் செவிசாய்ப்பார்களென நாம் எதிர்பார்க்கக்கூடாது என நமக்குக் கூறுகின்றார். ஏனென்றால் அவர்கள் புரிந்துகொள்ளாதபடி அவர்கள் குருடராயும் செவிடராயும் இருப்பார்கள். ஆனாலும் படிப்படியாக அவர்களின் குருட்டுத்தனம் நீக்கப்பட்டு, அவர்களுக்கென்று அவர் வைத்திருப்பதை அவர்கள் பெற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருப்பார்கள் என நமக்கு வாக்களித்துள்ளார்.

உலகம் நம்மைப் புரிந்துகொள்ளாது – நாம் வேறுபட்டதொரு ராஜ்யத்திற்குரியவர்கள் என அவர்கள் அறியார்கள். ஆனால் நாம் அவர்களைப் புரிந்திருக்கிறோம். அப்போஸ்தலர் கூறும் வண்ணம், "ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்". ஆனால் உலகத்தாரால் புரிந்துகொள்ளமுடியாது. ஏனென்றால் ஒருவராலும் தங்கள் மனநிலைக்கு அப்பாற்பட்டு புரிந்துகொள்ள முடியாது. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நாமோ ஜென்ம சுபாவமானவைகளையும் புரிந்துகொள்ளமுடியும், ஆனால் ஜென்ம சுபாவமானவர்களோ ஆவிக்குரியவைகளை புரிந்துகொள்ளமுடியாது. "அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்". ஆகவே நாம் ஆறாயிரம் ஆண்டுகள் பாவத்தில் விழுந்துபோயுள்ள கோணலும் மாறுபாடுமான சந்ததி அல்லது ஜாதியின் மத்தியில் வசிக்கின்றோம். நமது கர்த்தர் கூறியதுபோன்று, "நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" – யோவான் 17:16.

**நமது தற்போதைய மகிமையான சிலாக்கியம்**

நாம் கர்த்தருடைய பார்வையில் விசேஷித்த ஜனங்களாக இருக்கிறோம். "விசேஷமானவர்கள்" என்ற இந்த வார்த்தை, பிரித்தெடுக்கப்பட்டஜனங்கள் என்று குறிக்கிறது. அதாவது தேவன் நமக்காக விசேஷமானவற்றை செய்துள்ளார் என்பதைக் குறிக்கிறது. கர்த்தர் இயேசு நம்மை கிரயத்துக்கு கொண்டுள்ளார். அவரது தகுதியான விலைக்கிரயம் நமக்காக செலுத்தப்பட்டுள்ளது. இந்த விலைக்கிரயம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்காகவே இன்னும் செலுத்தப்பட்டு வருகிறது. அப்போஸ்தலரின் செய்தி இவர்களுக்கே ஆகும். இந்த விசேஷித்த ஜனங்களை தெரிந்தெடுப்பதில், தேவன் என்ன நோக்கம் வைத்திருந்தார்? அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை நாம் அறிவிக்கும்படிக்கு ஆகும். அவரது புண்ணியத்தைஅறிவிக்க விரும்புவதற்கு தேவன் பெருமையுடையவரா அல்லது தகுதியற்றவரா? அப்படியல்ல, தம் சிருஷ்டிகளுக்கென்று ஏற்பாடு செய்திருக்கிற மாபெரும் ஆசீர்வாதங்களை அவரது புண்ணியங்கள் வெளிப்படுத்தும் என்பதற்காகவே, தேவன் தம் புண்ணியங்களை அறிவிக்க விரும்புகிறார்.

"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". என்று நாம் மனிதர் மத்தியில் கூறும்போது, அவரது புண்ணியங்களை அறிவிக்கின்றோம். அப்படி செய்வதன்மூலம் நாம் தேவனை மகிழ்விக்க முடியாது, அவர் ஏற்கனவே மகிழ்ச்சியாக உள்ளார். ஆனால் இப்படி செய்வதன்மூலம் செவிகொடுக்கும் ஜனங்களுக்கு பெரும் நன்மை செய்கின்றோம். தேவன் மீண்டுமாக தமது தயவுக்குள் அவர்களை கொண்டுவருவார். அவர்களது சாபத்தை நீக்குவார் என்பதை விளங்கப் பண்ணுகின்றோம். ஆகவே இப்பொழுது தேவனது புண்ணியங்களை கூறுவதென்பது மாபெரும் சிலாக்கியமாகும். ஆனால் அந்தோ! பரிதாபம்! செவிகொடுக்கும் காதுகளை அநேகர் பெற்றிருப்பதில்லை.

ஆனாலும் மனிதர்கள் தேவனிடம் திரும்ப நம்மாலான உதவிகளை அவர்களுக்கு செய்வதன்மூலம், நம் எஜமானின் புண்ணியங்களை அறிவித்து, நம் வைராக்கியத்தை வெளிப்படுத்துவோம்.

இராஜ்யத்தில் மனுக்குலத்தை ஆளுகை செய்வதும், பாவத்தை நீக்கி ஜனங்களை சொஸ்தமாக்கி நல்வழிப்படுத்துவதும், அவர்களது சிருஷ்டிகருடன் சீர்பொருந்தப் பண்ணுவதும் படிப்படியாக நிறைவேற வேண்டிய மாபெரும் பணியாகும். இது நிறைவேற ஆயிரமாண்டுகள் தேவைப்படுகிறது. இந்த மகிமையான பணி நம்முடையது. தேவனுடைய சுதந்திரராயும், கர்த்தர் இயேசுகிறிஸ்துவுடன் உடன்சுதந்திரராயும், தேவதூதர்களைக் காட்டிலும் உயர்ந்திருப்பதென்பது எவ்வளவு அற்புதமானது! ''எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக'' பிதாவாகிய தேவனுக்கு அடுத்தபடியாக கர்த்தர் இயேசு இருப்பதுபோல, நாம் அவருக்கு அடுத்தபடியாக இருப்போம்.

**மரணபரியந்தம் உண்மையுள்ளவனாயிரு**

நாம் கனத்தை தேடுபவர்களாய் மாத்திரமல்ல, தேவன் இந்த வகுப்பாருக்கு ஊழியத்தின் சிலாக்கியத்தையும் தர விருப்பமாயுள்ளார். செவிடாயுள்ள அனைவருடைய காதுகளையும் திறப்பது, நம் தேவனை புரிந்துகொள்வதற்காக அவரை அறியப்பண்ணவும், முழு உலகமும் காணும்படி விழிப்புணர்வு தரவும், முழு உலகும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கப் போவதை அவர்கள் உணரச் செய்வது போன்ற சிலாக்கியங்களைப் பெறுகிறார்கள். ''சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்''(ஏசாயா**11:9**). தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாக தங்களை முழுமையாக நிரூபித்தவர்களைக் கொண்டு மாத்திரமே இந்த வருங்காலத்தின் மகிமையான பணிகள் நடப்பிக்கப்படும். நற்செய்தியினை அறிவித்து, அவரது புண்ணியங்களை வெளிப்படுத்துவதில் கவனக்குறைவாக இருந்தாலோ அல்லது மாறுபாடு காண்பித்தாலோ, நாம் அந்த ராஜ்யத்திற்கு தகுதியானவர்களல்ல என்பதை நாம் வெளிப்படுத்துவோம். இறுதிவரை தங்கள் உண்மைத்தன்மையையும், விசுவாசத்தையும் நிரூபிப்பவர்களையே கர்த்தர் படிப்படியாக உயர்த்துவார்.

இப்படி செய்வதன்மூலம், மனிதர்கள் பின்பற்றும் முறைமையையே தேவன் செயல்படுத்துகிறார். மனிதர்கள் பிறப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னமே, தேவன் தமது திட்டங்களை வகுத்திருந்தார். இருப்பினும், ஞானவான்கள் உள்ளுணர்வுகளினால் சில கொள்கைகளை பின்பற்றுகின்றனர். நெப்போலியன் தான் கைப்பற்றிய தேசங்களில் தனக்கு விசுவாசமாயிருந்த பல்வேறு நபர்களை பிரபுக்களாக ஆக்குவதற்கு கட்டளையிட்டிருந்தார் என்று சொல்லப்படுகிறது. நமது கர்த்தர் கூறுகிறார்; ''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்''– வெளி **2:10**. ஆகவே , ''அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு'' ஒவ்வொரு நிலைப்பாட்டிலிருந்தும் நாம் மாபெரும் உற்சாகத்தை அடைகிறோம். நாமும் ஒரு காலத்தில் இருளில் இருந்தோம், இப்போதோ வெளிச்சத்தில் உள்ளோம் என்பதை இந்த வேதப்பகுதி நமக்கு உணர்த்துகின்றது.

ஒப்பீட்டளவில் பார்க்கும்போது, சிலரே இந்த அனுபவத்தை அடைந்துள்ளனர். பாவத்தினின்றும் அறியாமையினின்றும் எழுப்பப்பட்டு, தேவனுடைய திட்டங்களை உள்ளான இருதயத்தில் உணரக்கூடியவர்களே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளனர். பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு இந்த பரிசுத்த ஜாதியின் அங்கங்களாகவும், விசேஷித்த சந்ததியாராயும் ஆனவர்களைத்தவிர, வேறு எவரும் இந்த வெளிச்சத்தைப் பெறமுடியாது. தேவனுடைய மாபெரும் தயவைக் கூறி, அந்தகாரத்திலிருந்து வெளியேறி வெளிச்சத்திற்கு வர, உலகிற்கு செய்யப்படுகின்ற உதவியைக் காட்டிலும் பெரும் உதவியை நாம் செய்திட முடியாது. நாம் பிரகாசித்திடும்படி நமக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டுள்ளது. நமது உள்ளத்தில் இருந்து நாம் பாடும்படி இயக்கப்படுகிறோம்;

அனைத்தும் இயேசுவுக்கே, அனைத்தும் இயேசுவுக்கே
என்னுடையவை அனைத்தும் ஈடுபலியினால் மீட்டதன் வல்லமையே''
என் சிந்தைகள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் அனைத்தும்,
என் வாழ்நாள் முழுவதும் மீட்பின் வல்லமையே...

**நாம் நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல**

தீத்து **2:14**இல் அப்போஸ்தலர் பவுல் இதைப்போன்ற

கருத்தையே முன் வைக்கின்றார்: "தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும்..." இங்கு அவரால் குறிப்பிடப்படும் ஜனங்கள், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற காத்திருக்கும் தேவனுடைய பரிசுத்தவான்களேயாவர். ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையில்(பரோஷியா – வந்திருத்தல்), அவர்களுக்கு அக்காரியங்கள் கொடுக்கப்பட்டன. விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தாங்கள் கிரயத்திற்கு கொள்ளப்பட்டதை அவர்கள் என்பதை தெளிவாக உணர்கிறார்கள். சில மொழிபெயர்ப்பாளர்கள், 1பேதுரு2:9 வசனத்தை, நற்கிரியைகள் செய்ய பக்திவைராக்கியமுள்ள, கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட ஜனங்கள் என்கின்றனர். கர்த்தருடைய ஜனங்கள் என்பவர்கள் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருந்து, மீட்கப்பட்டவர்கள். வீழ்ச்சியின் நிமித்தம் அவர்கள் எந்த நிலையிலிருந்தாலும், அந்த நிலையில் இருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல், சில குறிப்பிட்ட பாவங்களை மறுபரிசீலனை செய்யும்போது, "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமானாக்கப்பட்டீர்கள்" என குறிப்பிடுகிறார்– 1கொரிந்6:9–11.

தீத்து2:14இல் உள்ள சிந்தையும் அதற்கொப்பாக உள்ளது. நீங்கள் விசேஷித்த ஜனங்கள், பாவம் மற்றும் மரணத்திலிருந்து கிரயத்திற்குக் கொள்ளப்பட்டவர்கள், அப்படிப்பட்ட அனைவரும் "விசேஷித்தவர்கள்". மீதமுள்ள மனுக்குலத்தினின்று வேறுபட்டவர்கள். மனுக்குலத்தின் மத்தியிலும், கிறிஸ்தவ மண்டலத்தின் மத்தியிலும் சில தீயவர்களைக் காணமுடியும், அதே சமயத்தில், புறஜாதியார் மத்தியில் சில நற்பண்புடையோரையும் நம்மால் காணமுடியும். ஆனால் பரிசுத்த பவுல் குறிப்பிடும் விசேஷித்த ஜனங்கள், மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்கள்– அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள்.

இவர்களுக்கு "பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின". இவர்கள் புதிய நம்பிக்கைகளையும், புதிய குறிக்கோள்களையும் உடையோராயுள்ளனர். இப்பிரபஞ்சத்திலுள்ள எவருக்கும் கொடுக்கப்படாத உயரிய ஸ்தானத்தை அடையும் நம்பிக்கையை இவர்கள் பெற்றுள்ளனர். அதாவது, மேசியாவின் இராஜ்யத்தில் கூட்டாளிகளாக ஏற்படுத்தப்படுவர். இவைகள் மிகவும் அற்புதமான நம்பிக்கைகளாயுள்ளன. விசுவாசத்தினால் தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளும் இந்த நம்பிக்கைகள், மற்ற எல்லா ஜனங்களிடமிருந்தும் தனித்தன்மையுடையோராயும், பிரிக்கப்பட்டோராயும், விசேஷித்தோராயும், வேறுபட்டோராயும் உருவாக்குகின்றது.

**விசேஷித்த ஜனங்களின் பண்புகள்**

மற்றவர்கள் தற்காலத்தின் ஆதாயங்களையும், மேன்மையான தனித்தன்மைகளையும் எதிர்பார்க்கும் வேளையில், தேவன் இவர்கள் மனதில் ஏற்படுத்தியுள்ள அற்புதமான காரியங்களைக் கண்டு, இவ்வுலகத்தின் அனைத்து காரியங்களையும் குப்பையும் தூசியுமாய் எண்ணுவார்கள். "விலையேறப்பெற்ற முத்தை" அவர்கள் கண்டிருந்து, அதை வாங்க தங்கள் அனைத்தையும் கொடுத்திருக்கின்றனர். தேவனுடைய இராஜ்யமே மதிப்புமிக்கது என்று இவர்கள் கண்டு, அதை இப்போது அடையமுடியும், அல்லது ஒருபோதும் அடையமுடியாது என்பதைக் காண்கின்றனர். இந்த முத்தாகிய இராஜ்யத்தை அடையும் நிபந்தனைகளை அறிந்துகொண்டு, அதை வாங்கி நன்மையானதாக ஆக்குவதற்கு முயற்சிக்கின்றனர். சுயத்தை பலிசெலுத்துதல் எந்த சூழ்நிலையிலும் தேவனுக்கு உண்மையாயிருத்தல், எதிர்மறையான சூழலிலும் இறுதிவரை பொறுமையுடன் சகித்தல் போன்றவைகளே நிபந்தனைகளாயுள்ளன.

இந்த விசேஷித்த ஜனங்கள் இந்தப் பணியை தங்களில் நிறைவேற்றத் தேடுகின்றனர். ஏனெனில், இவைகள் கற்பனை செய்வதற்கும்மேலான மிக கிருபையுள்ள குணாதிசயங்களாயும், இயல்புகளாயும் இருப்பதை அவர்கள் காண்கின்றனர். இதன் காரணமாக, இவர்கள் இருமடங்கு அக்கறையாயுள்ளனர். நற்கிரியைகளில் வைராக்கியங் கொண்டுள்ளனர். மற்றவர்கள் நலமாயும் மகிழ்ச்சியாயும் இருப்பதையே இவர்கள் விரும்புகின்றனர். மேலும் இவர்கள், தேவனைக் குறித்த அறிவை மற்றவர்களுக்கும் பரப்ப விரும்புகின்றனர். தேவன் பிரியப்படும் காரியங்களை இவர்கள் நேசிக்கின்றனர். ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றுள்ளனர். இவர்கள் சமூக சீர்திருத்தம், தன்னடக்க சீர்திருத்தம் மற்றும் அனைத்து சீர்திருத்தங்களிலும் நாட்டம் கொண்டுள்ளனர். ஆனால் இந்த சீர்திருத்தங்களில் அவர்கள் ஈடுபடுவார்கள் என்பது இதன் அர்த்தமல்ல. ஒரே மனிதன் பெரிய பிரசங்கியாகவோ, வெற்றிகரமான விவசாயியாகவோ, வெற்றிகரமான வக்கீலாகவோ இருக்கமுடியாது. அவர் ஒரு பெரிய விவசாயியாக வேண்டுமானால் மற்ற காரியங்களை பெருமளவில் விட்டுக்கொடுக்க வேண்டும். அல்லது அவர் பெரிய பிரசங்கியாக இருப்பாரேயானால் மற்ற அநேக

காரியங்களின் பெரும்பகுதியை அவர் விட்டுக் கொடுக்கவேண்டும். இருப்பினும் அவர் இவை அனைத்திலும் பிரியம் கொள்ளலாம்.

அதேபோன்று தான் இந்த விசேஷித்த ஜனங்களிடத்திலும் காண்கிறோம். பிதாவிடமிருந்து ஒரு குறிப்பிட்ட பணி அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. செய்துமுடிக்க வேண்டிய மிக முக்கியமான பணிகளாக அவைகள் இருப்பதை அவர்கள் உணர்கிறார்கள். இதன் காரணமாக அவர்களின் கவனத்தை அரசியல் சீர்திருத்தம், சமூக சீர்திருத்தம், அல்லது பிற சீர்திருத்தங்கள் போன்ற தங்களுடையதல்லாத பிற வெளி வேலைகளுக்கு கவனம் செலுத்தமுடியாது. இந்த காரணங்களுக்காகவே இவர்கள், நடைமுறை ஜனங்கள் அல்ல, கொள்கைவாதிகள் என அழைக்கப்படுகின்றனர். இருப்பினும் இவர்கள் மிக நடைமுறைத் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் தேவனுடைய திட்டமே எல்லாவற்றிலும் மிகவும் நடைமுறைக்கேற்ற திட்டமாகும். இந்த ஜனங்கள், உடன் வேலையாட்களாக ஞானமான வழியை தேர்வு செய்கின்றனர். ஆனால் அவர்கள் மற்றவர்களிடம் குறை கண்டுபிடிப்பதில்லை. காண்பதற்கு கண்களும் கேட்பதற்கு காதுகளும் உள்ளவர்கள் மட்டுமே, இவைகளை கிரகிக்கின்றனர். அவர்கள் காண்பதற்கு அப்பால் மற்றவர்கள் செல்லமுடியாது என்பதை அறிந்துள்ளனர். இந்த விசேஷித்த ஜனங்களின் தனித்தன்மைகள் வாழ்க்கையின் அனைத்து நடவடிக்கைகளிலும் விரிவடைகிறது.

**நற்காரியங்கள் எவைகளை உருவாக்குகிறது**

எல்லா சத்தியங்களையும் ஒரே நேரத்தில் குறிப்பிடக்கூடாது என்பதைக் குறித்த ஞானம் இந்த ஜனக்கூட்டத்துக்கு உண்டு. மூன்றரை ஆண்டுகளாக தம்முடன் நெருக்கமாக இருந்த தமது பின்னடியார்களுக்கு எஜமானர் கூறினார்; “இன்னும் அநேகக் காரியங்களை நாம் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்” (யோவான்16:12). கர்த்தருடைய ஜனங்கள் பிறரை இடறச்செய்யாமல், அதேசமயம், மிகவும் ஆதாயமளிக்கும் வகையில் நன்மை செய்ய ஆவல் கொண்டுள்ளனர். அப்படியென்றால் இந்த விசேஷித்த ஜனங்கள் செய்யும் நற்கிரியைகள் என்பது, தேவனுடைய பணிகளை செய்வதில் வைராக்கியம் காண்பிப்பதில் உள்ளது. கர்த்தராகிய இயேசு கூறியதுபோன்று, “பகற்காலம் இருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்” (யோவான்9:4).

தேவனுடைய ஆவியைப் பெற்றிராது, எதிராளியின் ஆவியை அதிகம் கொண்டுள்ள உலகம் இவைகளை அங்கீகரிக்காது. உலகம் ஓரளவு பொல்லாங்கிலும், மாய்மாலத்திலும் சென்றுகொண்டிருக்கிறது. பரிசேயர்களிடம் இயேசு பேசியபோது, “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்”(யோவான் 8:44). தேவனுடைய வழியில் கர்த்தர் நடந்தபோது, அவருடைய நடைமுறை, அவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பைத் தருவதாய் இருந்தது. ஆகவே கர்த்தர், “இருள் வெளிச்சத்தை எதிர்க்கிறது” என்று பிரகடனப்படுத்தினார். மேலும் இந்த யுகத்தின் முடிவுவரைஅது அப்படியாகவே இருக்கும் என முன்னெச்சரித்துள்ளார். அவர் சந்தித்த உபத்திரவங்கள் போன்றே, தம்மை பின்பற்றுகின்றவர்களும் சந்திக்க நேரிடும் எனவும் எச்சரித்துள்ளார். ஆனால் சத்தியத்தின்மீது ஆவலோடும் வைராக்கியத்தோடும் அவர்கள் இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தேவன் நம்மை நற்கிரியை செய்யும்படிக்கு அழைத்துள்ளபடியால், அவை நமக்கெதிராக பொறமையையும் வெறுப்பையும், பிறரிடமிருந்து எதிர்ப்புக்களையும் வருவித்தாலும், நாம் மிகுந்த வைராக்கியம் காண்பித்தல் வேண்டும். அவர் நிமித்தம் உபத்திரவப் படுவதற்கென்று அழைக்கப்பட்டிருப்போமானால் நாம் களிகூரவேண்டும். உலகம் இந்த நற்கிரியைகளை தற்காலத்தில் அங்கீகரிக்கவில்லை என்றாலும், அவர்களின் சந்திப்பின் நாளிலே படிப்படியாக அதைப் புரிந்துகொள்வார்கள்(1பேதுரு2:12). தேவனுடைய திட்டமே மிகச்சிறந்த திட்டமாக அவர்கள் காண்பார்கள். உலகத்திற்கு பொதுவான ஆசீர்வாதத்தை கொண்டுவரும் வாய்க்காலாக, மகிமையடைந்த சபை இருக்கும்.

விசேஷித்த ஜனங்கள் மாத்திரமே இந்தக் காரியங்களை தற்போது புரிந்துகொள்வார்கள். இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார் ; “பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. அவருடைய வார்த்தையைக் கேடகச்சென்ற திரளான ஜனங்கள், அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்(மத்தேயு13:11,13). இந்த விசேஷித்த உறவினுள் வந்திருப்பவர்கள் மட்டுமே இவைகளைப் புரிந்து கொள்வார்கள். “கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்”– சங்25:14.

அநேகர் இந்த சத்தியங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வதையும், பின்னர் தேவனிடத்தில் தங்களை உடன்படிக்கை மூலம் அர்ப்பணிப்பது மட்டுமே சத்தியத்தில் மேம்பாடு அடைவதற்கான ஒரே வழி என்பதை மறந்தவர்கள் போல் காணப்படுவதையும் நாம் கண்டடைகிறோம், அவர்கள் உடன்படிக்கை செய்யத் தவறுவார்களேயானால், முன்னேற்றமடைவதில் நிச்சயம் தோல்வியடைவார்கள். இதைக் குறித்த சரியான சிந்தனைகளை ஜனங்களுக்குக் கொடுப்பதை நாம் உறுதி செய்துகொள்ளவேண்டும். இவ்வாறு,தேவனுடைய விசேஷித்த ஜனங்களானவர்கள், நற்காரியங்களை செய்ய வைராக்கியமுள்ளவர்கள் மட்டுமே இராஜ்யத்தை சுதந்தரிக்க முடியும்.

------------

**R 1338**

## "இயேசுவுக்காய் வாழ்தல்"

## LIVING FOR JESUS

ஒவ்வொரு நாளும் இயேசுவுக்காக வாழவேண்டுமே

அவர் எந்த வழியில் நடத்துகின்றாரோ,
அதிலேதான் பின்செல்ல வேண்டுமே

பெரிதானதோ, சிறிதானதோ, ஒருபோதும்
வாய்ப்பை நழுவ விடலாகாதே,

அவரது விருப்பம் செய்வது ஒன்றே,
அது மாத்திரம் போதுமே!

அழுகையை பாடலாலும் புன்னகையாலும்
பின்னுக்குத் தள்ள வேண்டுமே,

சூட்டிகையான ஒருவரைக் கண்டால்
இந்த உலகம் அதனை அறியாதே,

எங்கேயும் எப்போதும் இயேசுவுக்காய் வாழ்ந்தாலே,

அவர் துன்பப்படும் ஆத்துமாவைத் தேற்றிடுவாரே,

அங்கேயும் இங்கேயும் விதைகளைத் தூவிச் செல்வாய்,

கனி எப்போது காய்க்கும், எப்படிக் காய்க்கும்,
எந்த அளவில் காய்க்கும்,

என்றே கவலை கொள்ள வேண்டாம்,
நிச்சயம் காய்க்கும்.

அறுவடையை ஆண்டவர்தாமே
வீட்டிற்கே கொணர்ந்திடுவார்,

துன்பத்திலும், இன்பத்திலும்
இயேசுவுக்காய் வாழ்வதுவே,

மகிழ்ச்சியோ, கவலையோ, வெளிச்சமோ, மழையோ,

கசப்பிலிருந்தும் இனிப்பிலிருந்தும்
அபூர்வமான மலர்களைத்

தெரிந்தெடுத்தாரே, அவர் பாதத்தண்டையிலே
அமர்ந்து கேட்கும்போதினிலே,

மாபெரும் பாடங்களைக் கற்றுக்கொள்வோமே,

இயேசுவுக்காய் வாழ வேண்டுமே,
சிறுசிறு செயல்கள் தாமே,

நம் தினம்தோறும் வாழ்வினிலே
சிறகுகள் முளைத்திடுமே,

வேகமான, விவேகமான, வலிமையான
வீரம் நிறைந்த தூதர்களே,

தேவன் ஒருவர் மாத்திரம் அறிவாரே,
ஒரு ஆத்துமாவைக் காப்பாற்றலாம் என்றே,

இயேசுவுக்காய் வாழவேண்டுமே,
வாழ்கிறோம் இறக்கவில்லையே,

தலையான அருவியிலிருந்தே
செல்வாக்கு மிகுந்த வாழ்க்கைதனை,

பெற்றிடுவோமே, அமைதியாகவே
நீர் பாய்ச்சி விடுகின்றார்,

அதனைக் காண்பதற்கில்லை,
வாழுகின்ற அந்த நீரோடையினின்றே

பல வாழ்க்கைகள் வாழக் கிடைக்கின்றதே
இயேசுவுக்காய் வாழ வேண்டுமே,

அவருக்குள் அடங்கியிருக்க வேண்டுமே!

அவருடைய வாழ்க்கை பூரண சமாதானம்
ஒய்வும் நிறைந்ததுவே,

பாவத்திற்காய் பாவ நிவாரணம் கொடுக்கப்பட்டதே,
என்னுடைய எல்லாமும் முழுமையடைந்ததே,
செல்வாக்கு மிகுந்ததே

ஆவியிலே மகிழ்ந்து நிறைந்து,
இனிமையாகவே தேற்றப்பட்டதுவே,

மகிமை நிறைந்த தேவகுமாரனே,
உம் போலவே இப்படித்தான்

என் வாழ்க்கை அமைய வேண்டுமே,
இறைநிறைந்த அற்புதமான

ஐக்கியம் நம் தந்தையுடனே இங்கே ஆரம்பமானதே,
எனவேதான் நான் வாழுகின்றேனே இயேசுவுக்காகவே

--------